


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.07.2023) சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற "முதலமைச்சர் கோப்பை – 2023 மாநில அளவிலான போட்டிகள் நிறைவு விழாவில், அதிக பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் முதல் இடம் பெற்ற சென்னை மாவட்ட அணிக்கு பரிசுக் கோப்பையை சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. மு.அருணா, மாவட்ட விளையாட்டு அலுவலர்கள், விளையாட்டு வீரர்–வீராங்கனைகள் ஆகியோரிடம் வழங்கி பாராட்டினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர். பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (25.07.2023) சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற "முதலமைச்சர் கோப்பை – 2023 மாநில அளவிலான போட்டிகள்" நிறைவு விழாவில், முதலமைச்சர் கோப்பை 2023 தொடர்பான 'களம் நமதே' புத்தகத்தை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர். பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மகளிரின் பொருளாதார சுதந்திரத்தை உறுதி செய்யும் மகத்தான திட்டமாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை அண்ணா பிறந்த செப்டம்பர் 15 ஆம் நாள் முதல் நம் கழக அரசு செயல்படுத்தவுள்ளது. இதற்கான விண்ணப்பப் பதிவுகள் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வரும் நிலையில், சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சிந்தாதிரிப்பேட்டை சமுதாய நலக்கூடத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கான சிறப்பு முகாமினை கழக இளைஞர் அணிச் செயலாளரும் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்து இணைய சேவை உள்ளிட்ட தொழில்நுட்ப வசதிகளை தயார் நிலையில் வைத்திருந்து கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்துக்கான விண்ணப்பங்களை முறையாக பதிவு செய்திடவும், தகுதியுள்ள ஒரு பயனாளி கூட விடுபட்டுவிடக்கூடாது என்ற நோக்கோடு செயல்பட வேண்டுமெனவும் அங்கிருந்த அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்.

## திண்டிவனம் நகரில் கலைஞர் நூற்றாண்டு விழா!

*திண்டிவனம், ஜூலை 27 -*

திண்டிவனம் நகராட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழா 100 இடங்களில் சிறப்பாகக் கொண்டாடப்படும் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் நகர தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் திண்டிவனத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடை பெற்றது.

நகர அவைத் தலைவர் ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார்.

நகர கழக செயலாளர் கண்ணன் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், பொருளாளர் ரமணன்,நகரத் துணைச் செயலாளர்கள் தாஜுதீன், ஓவியர் கௌதமன், ரேணுகா நகர பொருளாளர் சின்ன ராஜேந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### திண்டுக்கல் சின்னாளப்பட்டி 15வது வார்டில்

## பொதுமக்களிடம் அமைச்சர் ஐ.பெரியசாமி குறைகளைக் கேட்டறிந்தார்!

*சின்னாளப்பட்டி, ஜூலை 27-*

சின்னாளபட்டி 15வது வார்டு ஜீவா நகரில் உள்ள தெருக்களில் நடந்து சென்று பொதுமக்களிடம் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி குறைகளை கேட்டறிந்து நிவர்த்தி செய்தார். அப்பகுதியில் வடிகால் வசதி, பேவர் பிளாக் கற்கள் சாலை அமைத்துக் கொடுக்க உத்தரவிட்டார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் சின்னாளப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட 15வது வார்டு ஜீவா நகருக்கு வந்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு பேரூராட்சி வார்டு உறுப்பினர் ராஜு தலைமையில் மேள தாளங்கள் முழங்க உற்சாக வரவேற்பு அளிக்கப் பட்டது.

அதன்பின்னர் கிளைச் செயலாளர் மணி மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் மாலை மற்றும் சால்வை அணிவித்து வரவேற்றனர்.

ஜீவா நகரில் உள்ள தெருக்களுக்கு நடந்து சென்று அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

ஜனதா காலனி ஜீவா நகர் பகுதியில் உள்ள வடிகால்கள் சிறிய அளவில் இருப்பதால் மழை பெய்தால் கழிவுநீர் வீடுகளுக்குள் புகுந்து விடுவதாக அப் பகுதி மக்கள் கூறினார்கள்.

உடனடியாக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பழைய வடிகால்களை இடித்துவிட்டு கரணை கல் கொண்டு வடிகால்களை அமைக்க உத்தரவிட்டார்.

அதன்பின்னர் ஆசா தியேட்டர் சாலையில் உள்ள கைப் பம்ப் மற்றும் சிறு மின் விசை தண்ணீர் தொட்டியை புதுப்பிக்க உத்தரவிட்டார்.

அதனை தொடர்ந்து கறிக்கடை சந்தானம் தெருவிற்கு வந்து பொதுமக்களிடம் குறைகளை கேட்ட போது அப்பகுதி மக்கள் வடிகால் வசதி வேண்டுமென கோரிக்கை விடுத்தனர்.

உடனடியாக பேரூராட்சி அதிகாரிகளை அழைத்து அப்பகுதிக்கு புதிய வடிகால் உடனடியாக செய்து கொடுக்க வேண்டுமென உத்தரவிட்டார். பின்னர் கட்சி நிர்வாகிகளிடம் பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி ஒற்றுமையுடன் செயல்பட்டு மக்களுக்கான நலத்திட்ட பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், அமைச்சரின் உதவியாளர்கள் காமாட்சி, ஹரிஹரன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி பாறைப்பட்டி வாஞ்சிநாதன், பேரூராட்சி செயல் அலுவலர் செல்வராஜ், பேரூராட்சி மன்றத் தலைவர் பிரதீபா, துணைத் தலைவர் ஆனந்தி, பேரூராட்சி தலைமை எழுத்தர் கலியமூர்த்தி, துப்புரவு ஆய்வாளர் கணேசன், துப்புரவு மேற்பார்வையாளர்கள் தங்கத்துரை, சரளா, கணக்காளர் ராமமூர்த்தி, பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் ரவிக்குமார், தாமரைச் செல்வி, ஹேமா, ராஜாத்தி, ராஜு, கிளைச் செயலாளர் சைக்கிள் கடை மணி மற்றும் நகர தி.மு.க. நிர்வாகிகள், இளைஞரணியினர் மகளிரணி பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் அயலக தி.மு.க. மலேசிய மற்றும் அயலக தமிழ் இந்தியர்கள் அமைப்பு சார்பாக நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல் திருமாவளவன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். அயலக தி.மு.க. மலேசிய தலைவர் ஃபிர்தவ்ஸ் மற்றும் துணைத்தலைவர் ஜெய்லானி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு அரசு அயலக நலத்துறை உறுப்பினர் லண்டன் ஃபைசல், டத்தோ ஷாஹுல் HRD, ஈமான் பேரவையின் துணைச்செயலாளர் காசிம், துவான் ஜஃபருல்லா, துவான் கஸ்ஸாலி, புக்கிட் ஜலீல், மற்றும் ஏராளமான தமிழ் உணர்வாளர்கள், பத்திரிக்கையாளர்கள், தி.மு.க. சொந்தங்கள் என கலந்து கொண்ட நிகழ்வில், பேராசிரியர், முனைவர் ஆனந்தராஜா எழுதிய அமைதிக்கல்வி, விழுமக்கல்வி என்ற புத்தகத்தை தொல்.திருமாவளவன் வெளியிட லண்டன் ஃபைசல் மற்றும் மலேசிய தொழில் அதிபர் ஜஃபருல்லா ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

